## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 76/2023

**Witness DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தன் | தொழில் | |
| த/பெ | முனுசாமி | வயது | |
| ஊர் | | தேதி | 01.11.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (01.11.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

எனது சொந்த ஊர் பொய்யப்பாக்கம் என்றால் சரி. என் பெயரில் வழக்குதாக்கல் செய்துள்ள வாதி கார்த்திகேயன் என்பவரை எனக்கு தெரியும். கார்த்திகேயன் என்பவரை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் அவர் என் ஊர்க்காரர். அவர் என் ஊர்க்காரர் என்பதால் அவர் பிறந்ததிலிருந்து எனக்கு தெரியும். எனது வீட்டிற்கும் வாதியின் வீட்டிற்குகம் எவ்வளவு துாரம் என்றால் அவர் எனது பக்கத்து தெருக்காரர் நடந்து சென்றால் 5 நிமிடத்தில் சென்று விடலாம். எனது வீடு உள்ள தெருவின்பெயர் மாரியம்மன் கோவில் தெரு. வாதியின் வீடு உள்ள தெருவின்பெயர் மாரியம்மன் கோவில் தெரு என்றால் இல்லை. அவர் வீடு உள்ள தெருவின் பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. எனது கிராமத்தின் பெயர் பொய்யப்பாக்கம். பொய்யப்பாக்கம் கிராமத்தில் நான் பிறந்ததிலிருந்து இருந்து வருகிறேன். 56 வருடங்களாக வசித்து வருகிறேன். எனது பாட்டன், முப்பாட்டன் அனைவரும் அதே ஊரைச் சேர்ந்தவர் தான்.

வாதியின் வீடு உள்ள தெருவின்பெயர் மாரியம்மன்கோவில் தெரு என்றாலும் இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வீரப்பன் என்பவரை விசாரணை செய்த போது நான் நீதிமன்றத்தில் இருந்தேன். 3வது சாட்சியான அமிர்தாசலம் என்பவரை விசாரணை செய்யும்போது நான் நீதிமன்றத்தில் இருந்தேன் என்றால் சரி. வீரப்பன் மற்றும் அமிர்தாசலம் ஆகியோர்கள் பொய்யப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரி. அவர்கள் கார்த்திகேயன் என்பவரது உறவினர்கள். இந்த வழக்கு விசாரணை முன்பு வீரப்பன் மற்றும் அமிர்தாசலம் ஆகியோர்களை சந்தித்திருக்கிறேன் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் தான் முதல் முறையாக வீரப்பன் மற்றும் அமிர்தாசலம் ஆகியோர்களை பார்த்தேனா என்றால் ஆமாம். வீரப்பன் மற்றும் அமிர்தாசலம் ஆகியோர்களை நான் சந்தித்துள்ளேனா என்றால் சந்தித்துள்ளேன் வழக்கிற்காக சந்திக்கவில்லை. நான் வீரப்பன் மற்றும் அமிர்தாசலம் மற்றும் வாதி ஆகியோர் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் தான் என்றும் ஆனால் அவர்களை பார்க்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல சாட்சி மீண்டும் ஊர்க்காரரர் என்ற முறையில் தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறார். வழக்கு தொடர்பாக வாதி என்னிடம் பணம் கொடுத்து அதனை நான் திருப்பி தரவில்லை என்று கூறி ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்று சொன்னால் சரி அதனை எனது மகன் வாங்கினார். படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram